# இன ஒருங்கிணைப்புக் கொள்கை - கடந்த ஆண்டு அதிகமான மேல்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன

***Seithi Mediacorp,*** 12 June 2023

கழக புளோக்குகளில் இன ஒருங்கிணைப்புக் கொள்கை தொடர்பில் கடந்த ஆண்டு செய்யப்பட்ட மேல்முறையீடுகளில் கிட்டத்தட்ட 35 விழுக்காடு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

2020ஆம் ஆண்டைவிட அது சுமார் 20 விழுக்காடு அதிகம்.

கழக மறுவிற்பனை வீட்டை வாங்குவதற்கான விண்ணப்பங்களில் அது சிறிய அளவே, அதாவது 1.5 விழுக்காடு மட்டுமே என்று சட்ட, உள்துறை அமைச்சர் கா. சண்முகம் கூறினார்.

கொள்கை ஆய்வுக் கழகத்தின் 35ஆம் ஆண்டு நிறைவு மாநாட்டில் அவர் அந்த விவரங்களை வெளியிட்டார்.

1989ஆம் ஆண்டில் இன ஒருங்கிணைப்புக் கொள்கை அறிமுகம் செய்யப்பட்டது.

எந்தவோர் இனக் குழுவும் அதிக அளவில் ஒரே புளோக்கில் அல்லது பகுதியில் வீடுகளை வாங்குவதைத் தவிர்க்க, ஒவ்வோர் இனத்துக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையில வீடுகள் ஒதுக்கப்படுகின்றன.

3இல் ஒரு பகுதி கழக புளோக்குகள் அந்த வரம்பைக் கடந்த ஆண்டு எட்டியதாக அமைச்சர் சண்முகம் கூறினார்.